விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 289 வள்ளுவர் ஆண்டு 2053 புரட்டாதி 17 செவ்வாய்க்கிழமை (04.10.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## யாழில் நாளுக்கு நாள் அதிகரிக்கும் போதைப் பாவனை

### தினமும் நூற்றுக்கணக்கானோர் புனர்வாழ்வுக்கு அனுப்பப்படுவதாக தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் நாளுக்கு நாள் போதைப்பொருள் பாவனை அதிகரித்து வருகின்றது.

போதைப் பாவனையால் பாதிக்கப்பட்ட நூற்றுக்கணக்கானோர் தினந்தோறும் புனர்வாழ்வு மையங்களுக்கு அனுப்பப் படுகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

பாடசாலை மாணவர்கள் உட்பட இளைஞர்களே போதைப்பொருள் பாவனைக்கு அதிகமாக அடி

11

## போதையை கட்டுப்படுத்த விசேட செயலணி

### நீதி அமைச்சர் விஜயதாச



(கொழும்பு)

போதைப்பொருள் கடத்தலைக் கட்டுப்படுத்துவதற்காக விசேட செயலணியொன்றை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நீதி அமைச்சர், கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

11

## இலங்கைக்கு உதவத் தயார்

# கருத்து சுதந்திரத்திற்கு மதிப்பளித்தல் அவசியம்

### ஐரோப்பிய ஒன்றியம் ரணில் அரசுக்கு உறுதி



(கொழும்பு)

**இலங்கை அரசு கருத்துச் சுதந்திரம், ஒன்று கூடல் சுதந்திரம் போன்ற அடிப்படை உரிமைகளை மதித்து செயற்படுவது அவசியமானது என ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவர் உர்சுலா வொன் டெர் லேயன் தெரிவித்துள்ளார்.**

பொருளாதார சவால்களை வெற்றிகொள்வதற்கான இலங்கையின் முயற்சிகளுக்கு எப்போதும் ஆதரவளிக்க ஐரோப்பிய ஒன்றியம் அர்ப்பணிப்புடன் இருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

11

## ஊர்காவற்துறையில் மயங்கி விழுந்த குடும்பஸ்தர் மரணம்

### நிமோனியா காய்ச்சல் என அறிக்கை

(கரணவாய்)

ஊர்காவற்துறையில் மயங்கி விழுந்த குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இவர் நிமோனியா காய்ச்சலால் பாதிக்கப்பட்ட நிலையில் மரணமடைந்துள்ளார் என மருத்துவ அறிக்கை

11

## சுவிஸிலிருந்து நாடு திரும்பிய இளம் குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

சுவிஸிலிருந்து நாடுதிரும்பிய இளம் குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப் பட்டுள்ளார்.

சங்கானையைச் சேர்ந்த அமுர்தலிங்கன் குவின்டன் (வயது 42) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு

11

## டீசலின் விலையை குறைக்க முடியாது

### எரிசக்தி அமைச்சர் காஞ்சன



(கொழும்பு)

உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை குறைப்பை தொடர்ந்து தேசிய மட்டத்தில் எரிபொருள் விலையை தீர்மானிக்க முடியாது.

11

## 250 ரூபாயாக மாவின் விலை குறைவடையும்

(கொழும்பு)

எதிர்வரும் வாரத்தில் ஒரு கிலோ கோதுமை மாவின் விலை 250 ரூபாயாக குறைக்கப்படும் என வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ பாராளுமன்றத்தில்

11

## வரணியில் அம்மிக் குளவி காலில் விழுந்த குடும்பஸ்தர்

### காய்ச்சல் காரணமாக மரணம்

(கரணவாய்)

வரணி வடக்கில் அம்மிக் குளவி காலில் விழுந்த குடும்பஸ்தர் ஒருவர் காய்ச்சல் காரணமாக உயிரிழந்துள்ளார்.

இதில் வரணி வடக்கு கொடிகாமத்தைச்சேர்ந்த 5 பிள்ளையின் தந்தையான கிட்டிணன் தங்கலிங்கம் (வயது-48) என்பவரே மரணமடைந்தவராவார்.

கடந்த 27 ஆம் திகதி மேசையிலிருந்து குறித்த நபரின் காலில் அம்மிக் குளவி விழுந்துள்ளது

இதனால் 2 நாள்க

11

## ஐ. நாவில் இலங்கைக்கு கடும் நெருக்கடி

### 6 நாடுகள் மட்டுமே ஆதரவளிக்கலாம்

(ஜெனிவா)

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கை குறித்த தீர்மானம் வாக்கெடுப்பிற்கு விடப்பட்டால் போதிய ஆதரவு கிடைக்காது என இலங்கை கருதுகின்றது. ஆறு நாடுகள் மாத்திரமே தீர்மானத்திற்கு எதிராக வாக்களிக்கும் என அச்சம் கொண்டுள்ளது என தகவல்கள் வெளியா

11

## மோ. சைக்கிள் விபத்து இளம் குடும்பஸ்தர் பலி



(கரணவாய்)

வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் ஒன்று விபத்துக்குள்ளானதில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் சுண்டிக்குளம் கல்லாறு பகுதியைச் சேர்ந்த சிவலிங்கம் பவிராஜ் (வயது - 27) என்ற இரண்டு பிள்ளை

11

## யாழ். மாநகர சபைக்கு நொதேன் வைத்தியசாலையால்

### தீயணைப்பு இயந்திரம் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

நொதேன் சென்றல் வைத்தியசாலையால் யாழ். மாநகர சபைக்கு தீயணைப்பு இயந்திரத்திரம் ஒன்று அன்பளிப்பு செய்யப்படவுள்ளது.

11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் நாவற்குழியில்
15 பரப்புக் காணி விற்பனைக்கு**

- A9 வீதியிலிருந்து 200 M தூரம்
- 20 அடிப் பாதையுடன்
- 3 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- நாவற்குழி சந்தியிலிருந்து 500M தூரத்தில்
- 1 பரப்பின் விலை - 3 இலட்சம் மட்டும்
- பார்வையிடும் நேரம் -
  காலை 9.00 இருந்து மாலை 6.00 மணி வரை

(12993)

**077 874 8135**

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கைதடியில் 10 பரப்பு (நிலப்பரப்பு)
காணி விற்பனைக்கு**

- A9 வீதியில் இருந்து இரண்டாவது காணி (50M தூரம்)
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- கைதடிச் சந்தியிலிருந்து 500M தூரத்தில்
- 18 அடிப் பாதையுடன் நல்ல சூழல், நன்னீர் ஊற்று நிலம்
- வீடுகள், திருமண மண்டபம் அமைக்க உகந்த சூழல்
- ஒரு பரப்பின் விலை 6 இலட்சம் (6,00,000/-) மட்டும்
- தரகர் தேவையில்லை.
- பார்வையிடும் நேரம் -
  காலை 9 மணி முதல் மாலை 6 வரை

(12993)

**077 911 6983, 077 076 0389**


## லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியின் இறுதி ஆண்டுப் பரீட்சை

மேற்படி கல்லூரியின் இறுதி ஆண்டுப் பரீட்சையானது எதிர்வரும் 2022 ஒக்ரோபர் மாதம் 12ஆம் திகதியிலிருந்து நடைபெறுவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

எனவே பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவர்கள் அதிபருடன் தொடர்பு கொண்டு அனுமதி அட்டையினைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பேராசிரியர் க.தேவராஜா
தலைவர் / அபிவிருத்திக்குழு

(C-5026)



## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஆசிரியை
திருமதி சுபத்திரா சிவரூபன் அவர்களின்
அன்புத் தந்தையார்

### அமரர் நாகமணி கணபதிப்பிள்ளை

(ஓய்வுபெற்ற சிரேஷ்ட சாலை பரிசோதகர்
இலங்கை போக்குவரத்துச் சபை
CTB - வடமாகாணம்)

அவர்கள் நேற்று (03.10.2022) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன்
அவரது ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C-5027)

**யாழ். இந்து மகளிர் கல்லூரிச் சமூகம்**

## மரண அறிவித்தல்

### சின்னவன் கோபாலபிள்ளை

**(ஓய்வுநிலை உத்தியோகஸ்தர் - மாநகர சபை)**



தோற்றம் 28.07.1942 — மறைவு 29.09.2022

கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னவன் கோபாலபிள்ளை அவர்கள் 29.09.2022 வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னவன் - முத்தி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கதிரன் - கதிராசி தம்பதியரின் பாசமிகு மருமகனும் தவமலரின் அன்புக் கணவரும் அமரர் உருத்திரன் மற்றும் புவீந்திரன் (யாழ்.போதனா வைத்தியசாலை), நரேந்திரன் (ஆராய்ச்சி யாழ்.மாநகர சபை), பிறேமா, ஸ்ரீஜெயா (யாழ்.போதனா வைத்தியசாலை), லீகலா, ஸ்ரீபிரியா (கனடா), துஸ்யந்தி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் யேந்திரனின் (லண்டன்) சிறிய தந்தையும் பஞ்சலிங்கம் (ஓய்வுநிலை உத்தியோகஸ்தர் - யாழ்.மாநகர சபை), பேரின்பநாதன் (ஓய்வுநிலை உத்தியோகஸ்தர் - யாழ். போதனா வைத்தியசாலை), மகேந்திரன் (யாழ்.மாநகர சபை), சதீஸ்குமார் (கனடா), துஜேந்திரன் (கனடா), சரோஜினி (யாழ்.போதனா வைத்தியசாலை), அகலிகா (சித்த மருத்துவம் - யாழ்.மாநகர சபை), சங்கீதா (லண்டன்), புஸ்பமலர் ஆகியோரின் பாசமிகு மாமனும் கபில் (ஆசிரியர்), குஜால், லக்ஷன், கவிஷாந், அபிநாத், பிரசோத், மதுரன், அனோஜ், ருபிசன், பியஷான், ஜெரன், சபிலா, கேமினா, லக்ஷி, யோசலா, சேழினி, கஜபூரணி, நிவேதா, சுவர்ணா, வர்ஷா, கர்ஷா, கிருஷாளினி, சுஜீகரன், ரஜீவன் ஆகியோரின் பாசமிகு பேரனும் லுசாந், டர்சித், பவிஷ், பியாஷ் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.10.2022) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் மு.ப 11.00 மணியளவில் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கொட்டைக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஆஸ்பத்திரி வீதி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். (12986)

தகவல்: குடும்பத்தினர்
0775438973

## மரண அறிவித்தல்

பிறப்பு 18 . 01 . 1931



இறப்பு 30 . 09 . 2022

### திருமதி பாக்கியம் கந்தையா

**(கால்நடை வைத்தியர்)**

வரணி இடைக்குறிச்சியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியம் கந்தையா (கால்நடை வைத்தியர்) அவர்கள் 30.09.2022 வெள்ளிக்கிழமையன்று இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - தங்கமுத்து தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நமசிவாயம் - சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற தங்கராஜாவின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற இராஜேஸ்வரியின் அன்பு மைத்துனியும், தயானி, ரஜந்தினி, ரேணுகா, மோகனவேல், தேவிகா ஆகியோரின் பாசமிகு மாமியாரும் டேவிட், துஷ்யந்தன், ரவிசங்கர், தவாணி ஆகியோரின் மாமியாரும் டவினா, ஸ்ரெபானா, அஷ்வின், பிரணிகா ஆகியோரின் பாசமிகு ஆச்சியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.10.2022) செவ்வாய்க்கிழமை மதியம் 12.30 மணியளவில் அன்னாரது இல்லமாகிய வரணி, இடைக்குறிச்சி - வரணியில் நடைபெற்றுப் பின்னர் கொடிக்காடு இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
மோகனவேல் - 076 796 2900 (C-5025)

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

# கப்ருக
# பவர் ப்லே

## 2022 செப்டெம்பர் 29 (சீட்டிழுப்பு 1044) விசேட சீட்டிழுப்பின்...

நாடுமுழுவதும்
இலட்சாதிபதிகள்
77




### கப்ருக பவர் ப்லே விசேட டிக்கெட் சீட்டிழுப்பில் வெற்றி பெற்றவர்கள்

**ரூ.ஒரு மில்லியன் வெற்றியாளர்கள் இருவர்**

கம்பஹா - 01 குருணாகல் - 01

**ரூ.ஒரு இலட்சம் வெற்றியாளர்களின் மாவட்டங்கள்...**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| கொழும்பு | - 11 | மாத்தறை | - 05 | புத்தளம் | - 03 | முல்லைத்தீவு | - 02 |
| களுத்துறை | - 04 | ஹம்பாந்தோட்டை | - 02 | அநுராதபுரம் | - 06 | பொலன்னறுவை | - 02 |
| கண்டி | - 07 | யாழ்ப்பாணம் | - 04 | பதுளை | - 03 | கிளிநொச்சி | - 01 |
| மாத்தளை | - 01 | வவுனியா | - 01 | இரத்தினபுரி | - 04 | மொணராகல | - |
| நுவரெலியா | - 01 | மட்டக்களப்பு | - 01 | கேகாலை | - 02 | அம்பாறை | - 01 |
| காலி | - 02 | குருணாகல் | - 07 | கம்பஹா | - 06 | | |

**தலா பத்தாயிரம் ரூபா வீதம் நாடளாவிய ரீதியிலான வெற்றியாளர்கள் 182...**

கப்ருக வெற்றியாளர்கள் 30,165,960.00 க்குள் ரூ.30,165,960.00 பணம் பகிர்ந்தளிக்கப்படும்.

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல.356, கலாநிதி கொல்வின் ஆர்.டி. சில்வா மாவத்தை,
யூனியன் பிளேஸ், கொழும்பு 02.

(C-1806)

www.dlb.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தானுக்கு எதிரான இருபது-20 தொடரை வென்றது இங்கிலாந்து

பாகிஸ்தான் அணிக்கெதிரான ஏழாவது இருபது-20 போட்டியில் இங்கிலாந்து அணி 67 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.




இந்த வெற்றியின் மூலம் ஏழு போட்டிகள் கொண்ட இருபது-20 தொடரை 4-3 என்ற கணக்கில் இங்கிலாந்து வென்றது.

லாகூர் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 209 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் மாலன் ஆட்டமிழக்காது 78 ஓட்டங்களையும் ஹரி புரூக் ஆட்டமிழக்காது 46 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

இதனைத்தொடர்ந்து 210 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய பாகிஸ்தான் அணி 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 142 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது. இதனால், இங்கிலாந்து அணி 67 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. (6)

## மரண அறிவித்தல்



நவாலியூர்

**திருமதி கந்தையா அழகரத்தினம்**

**(அழகம்மா)**

*புலவர் வீதி, நவாலி வடக்கைச் சேர்ந்த திருமதி கந்தையா அழகரத்தினம் அவர்கள் நேற்று (03.10.2022) இறைவனடி சேர்ந்தார்.*

*அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (04.10.2022) காலை 10 மணிக்கு நவாலியில் இடம்பெறும்.*

புலவர் வீதி,
நவாலி வடக்கு,
மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்

(12994) (HSCMF)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஆசிரியர்
**திரு.பொன்னையா உதயராசா**
அவர்களின் அன்புத் தாயார்



அமரர் **சின்னம்மா பொன்னையா**

அவர்கள் நேற்று (03.10.2022) காலமாகிவிட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்திடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*பிரிவுத் துயருடன்:-*
யாழ்.இந்து மகளிர் கல்லூரி சமூகம்

(C-5028)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2710

**மகிழன்**




**சுதர்சினி**




**அருண்**




**றியானி**




**தினேஸ்**




**பிரதீபா**





நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழில் 217 கிலோ கேரள கஞ்சா மீட்பு

(கரணவாய்)

யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொலிகண்டி கடற்கரை வாடிப் பகுதியில் 217 கிலோ கேரள கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்டுள்ளன.



இராணுவ புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இராணுவத்தினரால் குறித்த கேரள கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டுள்ளன.

வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் கேரள கஞ்சா கடத்தல் தொடர்பில் கிடைத்த தகவலையடுத்து நேற்று அதிகாலை அங்கு சென்ற இராணு வத்தினர், கரையொதுங்கி வாடிப்பகுதி யில் மறைத்து வைக்கப்பட்டு இருந்த நிலையில் 217 கிலோகிராம் கேரள கஞ்சா பொதிகளை மீட்டனர். இவ்வாறு மீட்கபட்டவை வல்வெட்டித்துறை பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மற்றும் இராணுவ புலனாய்வு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (நி-6-33-104)

## வாணி விழாவும் சிறுவர் தினமும்

(சாவகச்சேரி)

தென்மராட்சி-தனங்கிளப்பு புதிய மலரும் மொட்டுக்கள் சிறுவர் கழகத்தின் வாணி விழா மற்றும் சிறுவர் தின நிகழ்வுகள் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு மலரும் மொட்டுக்கள் சிறுவர் கழக மைதானத்தில் இடம் பெறும் என விழா ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (நி-6-30)

## அலங்கார உற்சவம்

(கரணவாய்)

நாகர்கோவில் பூர்வீக நாகதம்பிரான் ஆலய அலங்கார உற்சவத் திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பதினொரு தினங்கள் திருவிழா இடம்பெறும். இவ் உற்சவத்தில் எதிர்வரும் 12 ஆம் திகதி புதன் கிழமை சப்பரத்திருவிழாவும் 13 ஆம் திகதி வியாழக்கிழமை சமுத்திர தீர்த்தமும் மறுநாள் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பட்டு தீர்த்தமும் இடம்பெறும். (நி-6-60)

## வெற்றிலைக்கேணி புனித வியாகுல மாதா ஆலயத் திருவிழா

(பொற்பதி)

வெற்றிலைக் கேணி புனித வியாகுலமாதா ஆலயத்தின் திருவிழா நேற்று முன்தினம் மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. கட்டைக்காடு பங்குத்தந்தை தலைமையில் இந்த வழிபாட்டு நிகழ்வு இடம்பெற்றதைத் தொடர்ந்து கொடி ஏற்றப்பட்டது.

தொடர்ச்சியாக வழிபாடுகள், ஆராதனைகள் இடம்பெற்று எதிர்வரும் 9 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 6 மணிக்கு திருவிழா திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். (நி-6-64)

## கொடிக்கம்பங்களை திருடிய இருவர் கைது

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கைதடிப் பகுதியில் அமைந்துள்ள அரச திணைக்களம் ஒன்றின் முன்பாக நாட்டியிருந்த கொடிக் கம்பங்களை திருடிய குற்றச்சாட்டில் சாவகச்சேரிப் பொலிஸாரால் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைதான சந்தேக நபர்களிடம் இருந்து இரும்பினால் ஆன 4 கொடிக் கம்பங்களை மீட்கப்பட்டிருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த திருட்டு சந்தேக நபர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (நி-6-30)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் அழைப்பும்



பிறப்பு 09 – 04 – 1958

இறப்பு 17 – 09 – 2021

### அமரர்.திரு. சின்னையா கணபதிப்பிள்ளை

(சீமெந்து கூட்டுத்தாபன அரச ஊழியர்)

அமரர்.திரு.சின்னையா கணபதிப்பிள்ளை அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு நாள் 06.10.2022

"ஆணிவேராய் எம்மை காத்து நின்ற எங்கள்
குடும்பத்தின் குலவிளக்கே
நாம் ஏங்குகிறோம், தவிக்கிறோம்
ஆண்டுகள் ஒன்றாகியும் ஆறவில்லை எம் மனம்
விழிகளில் கண்ணீர் இன்னும் காயவில்லை
காலங்கள் உருண்டோடினாலும் மாறாது
என்றென்றும் உங்கள் நினைவலைகள்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

06.10.2022 எதிர்வரும் வியாழக்கிழமை அன்று அன்னாரின் இல்லத்தில் காலை 10 மணி அளவில் நடைபெறும் கிரியையிலும் அதைத் தொடர்ந்து நண்பகல் மதிய போசன நிகழ்விலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொண்டு சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்

(இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்) (C-5023)

நாவலர் பண்ணை,
ஊற்றுப்புலம்,
கிளிநொச்சி.

தகவல்: மனைவி, பிள்ளைகள்
மற்றும் பேரப்பிள்ளைகள்
ராஜன்-076 287 8158
நிஷாந்தினி-077 077 5512
(அபிவிருத்தி உத்தியோகத்தர் பருத்தித்துறை பிரதேச செயலகம்)


## இராசிபலன்

04.10.2022
புரட்டாதி 17, செவ்வாய்க்கிழமை
நவமி பிற்பகல் 1.53 மணிவரை
உத்தராடம் முன்னிரவு 11.10 மணிவரை

சுபநேரம் 10.32-12.02 மணிவரை
இராகுகாலம் 3.02-4.32 மணிவரை
மகா நவமி விரதம்

சந்திராஷ்டமம் - மிருகசீரிடம், திருவாதிரை

வளவன்

**மேஷம்** – செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், செவிகுளிரும் செய்திகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு, கௌரவமான நாள்.

**கடகம்** – ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள், உறவினர், நண்பர்களின் சந்திப்பால் சிந்தை மகிழ்வீர்கள், காரிய அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு.

**துலாம்** – குடும்பத்திற்குத் தேவையான பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், நம்பி வந்தவர்களுக்கு உதவி செய்து மகிழ்வீர்கள், ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள்.

**மகரம்** – வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், தொழிலில் நீண்ட நேரம் பணிபுரியும் சூழ்நிலை உருவாகும், கற்பனை மிகுதியான நாள், போசன சுகமுண்டு.

**ரிஷபம்** – சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், அலைச்சல்கள் குறைந்து ஆதாயம் கிடைக்கும், பயணங்கள் கைகூடும்.

**சிம்மம்** – இனத்தவர் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள், போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் காண்பீர்கள், போசனசுகமுண்டு.

**விருச்சிகம்** – பாராட்டும் புகழும் கூடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், உறவினர் வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும், காரிய அனுகூலமுண்டு.

**கும்பம்** – சிறிய வேலையொன்றுக்காக சற்று அலைய நேரிடலாம், இறை வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழிலில் சில மாற்றங்களை செய்ய முற்படுவீர்கள்.

**மிதுனம்** – பொது வாழ்வில் வீண் பழிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது, ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகலாம், பிரயாண பயமுண்டு.

**கன்னி** – வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், பிள்ளைகள் வழியில் பெருமையான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**தனுசு** – ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**மீனம்** – அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக அமையும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், போசன சுகமுண்டு.

நீ [illegible] பயம் உனக்குள் புகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா

## பகைவனுக்கருள்வாய்!

(நேற்றைய தொடர்சி)

ஆனால் ஞானதீபனோ "நீ என்றென்றும் என் விரோதிதான். நீ என்ன சொன்னாலும் அதை ஏற்க மாட்டேன். என் எண்ணமும் மாறாது"என்று கூறி அங்கிருந்து போய் விட்டான்.

வேதாளம் இக்கதையைக் கூறி "மன்னனே! ஜக்கு தான் ஞானதீபனின் தந்தை இறந்ததற்குக் காரணம். இதனால் தான் ஞானதீபன் அவனைத் தன் விரோதியாகக் கருதி வந்தான். இப்படிப்பட்ட விரோதியை ஞானதீபன் தன் உயிரையும் பொருட்படுத்தாமல் விஷத்தை உறுஞ்சித் துப்பிக் காக்க முயன்றான். இது சரியா? தன் விரோதி ஒழிந்தான் என்று ஞானதீபன் ஜக்குவைக் காப்பாற்றாமலே போயிருக்கலாமே ஏன் அவன் அவ்வாறு செய்யவில்லை? என் இந்தக் கேள்விகளுக்கு நீ சரியான பதில் தெரிந்திருந்தும் நீ கூடறா விட்டால் உன் தலை வெடித்துச் சுக்கு நூறாகி விடும்" என்றது.

விக்கிரமனும் "ஞானதீபன் இயல்பாகவே நற்குணங்கள் கொண்டவன். ஆனால் உலகத்தைப் புரிந்தும் கொண்டவன். அதனால் தான் தன் எதிரியை அவன் நம்பவில்லை. ஒரு முறை ஜக்குவை நம்பினான். தன் தந்தையிடம் எதுவும் சொல்லக் கூடாது என்று அவன் ஜக்குவிடம் வாக்குறுதி வாங்கிக் கொண்டான்.

ஆனால் ஜக்கு அவ்வாக்குறிதியை மீறி விட்டான். அதனால் அவன் பெரிய நட்டம் அடைந்து விட்டான். தன் உயிருக்கு உயிரான தந்தையை இழந்து விட்டான். எனவே மறுபடியும் ஜக்குவின் காரணமாக அவன் எதையும் இழக்கத் தயாரில்லை. ஆனால் நடுத்தெருவில் ஜக்கு தன் உயிருக்குப் போராடுவதைக் கண்டதும் ஞானதீபனின் நற்குணம் அவனைக் காக்கத் தூண்டியது.

ஞானதீபன் அப்போது ஜக்குவைப் பகைவன் எனப் பாராமல் மனிதன் என்ற நோக்கில் பார்த்தான். அதனால் தான் அவன் ஜக்குவைக் காப்பாற்றத் தன் உயிரையும் பொருட்படுத்தவில்லை" என்றான்.

விக்கிரமனின் சரியான இந்த பதிலால் அவனது மௌனம் கலையவே அவன் சுமந்து வந்த உடலோடு வேதாளம் உயரக் கிளம்பிப் போய் மீண்டும் முருங்க மரத்தில் ஏறிக் கொண்டது.

(முற்றும் )

# தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு யாழ்.பொதுநூலகம் வழங்கும் ஆக்கங்கள்

## நான் விரும்பும் பெரியார்



ஈழநாடு பெற்றெடுத்த பெரியோர்களுள் சேர்.பொன்.இராமநாதனும் ஒருவராவார். இவரே நான் விரும்பும் பெரியார். இவரது பெருமை சொல்வதற்கு அரிது. கல்வி அறிவு, மதிநுட்பம், பேச்சுத்திறன், சமயப்பற்று, உயர் குணங்கள் ஆகிய அரிய பண்புகளால் இவர் சிறந்து விளங்கினார். இவரால் நமது நாடும் பெருமை பெற்றது. இவர் யாழ். மாவட்டத்தில் மானிப்பாய் என்னும் இடத்தில் பிறந்தார். தமது கல்வியை கொழும்பு நகரில் கற்றார். கல்லூரிப் படிப்பில் இவர் சிறந்து விளங்கினார்.

சட்ட நூல் கல்வி கற்று நியாயவாதியானார். வழக்கு பேசும் திறமையில் இவர் முன்னணியில் திகழ்ந்தார். மக்களதும் பிற மக்களதும் மதிப்பிற்கு உரியவர் ஆனார். இலங்கை ஆட்சி முறையில் பல்வேறு சீர்திருத்தங்களை ஏற்படுத்த விரும்பினார். சட்ட சபையில் படித்த இலங்கை மக்களின் பிரதிநிதியாகப் பதவி வகித்தார். தன் சொல் வன்மையாலும் மதிநுட்பத்தாலும் ஒப்பற்ற தலைவனாக விளங்கினார். இவர் சைவ சமய வளர்ச்சிக்காகவும் தமிழ் இனத்தின் நல்வாழ்விற்காகவும் அரும்பாடுபட்டார்.

யாழ்பாணத்து தமிழ் மாணவர்கள் கல்வியைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் பெற வேண்டுமென விரும்பினார். அதன் பொருட்டு இரு கல்லூரிகளை நிறுவினார். பெண்பிள்ளைகள் கற்பதற்காக சுன்னாகம் இராமநாதன் கல்லூரியை ஸ்தாபித்தார். ஆண் பிள்ளைகள் கற்பதற்காக பரமேஸ்வராக் கல்லூரியை ஸ்தாபித்தார். இதுவே பின் யாழ்.பல்கலைக்கழகமாக மாறியது.

கொழும்பு நகரில் கொட்டாஞ்சோலையில் பொன்னம்பலவாணேஸ்வரர் கோயிலை அமைத்தவரும் இவரே. இவர் எழுப்பிய கோவில்களும் நிறுவிய பாடசாலைகளும் இவர் ஆற்றிய தொண்டுகளும் இன்றும் இவரை நினைவூட்டிய வண்ணம் உள்ளன. இவரது ஒப்பற்ற சேவைகளை பாராட்டி இவருக்கு 'சேர்' பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டது. இவரது உருவச்சிலை கொழும்பு நகரில் உள்ள பழைய பாராளுமன்ற கட்டடத்தின் முன்றலில் இன்றும் காட்சி அளித்துக்கொண்டிருக்கின்றது. இலங்கை மக்களின் மனதில் அவரது நாமம் நிலைத்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

வாழ்க அவர் நாமம்!
வளர்க அவர் புகழ்!

# சிலப்பதிகாரம்

## மிரண்டான் வாயிற்காவலன்




அரண்மனை வாயிலில் இருக்கும் ஆராய்ச்சி மணி இடைவிடாது அடிக்கிறது. சூரியனே இல்லாத பகல் இரவில் வானவில், நடுப்பகலில் நட்சத்திரங்கள், எரி நட்சத்திரங்கள்... இதற்கெல்லாம் என்ன அர்த்தம்?

'இதை நீங்கள் அரசரிடமே சொல்லுங்கள்'

'சொல்லியாக வேண்டும்'

கோப்பெருந்தேவி அரசவைக்குப் புறப்பட்டாள். அவளது பரிவாரங்கள் தொடர்ந்தன.

பாண்டியன் சிம்மாசனத்தில் கம்பீரமாக வீற்றிருந்தான். அவனிடம் தன் கனவைச் சொன்னாள் கோப்பெருந்தேவி.

பாண்டியன் சிரித்தான். நடக்கப்போகிறவை எல்லாமே கனவில் வருமானால் வாழ்க்கை சீக்கிரமே அலுத்து விடும் தேவி. வாழ்க்கை அலுத்துவிட்டால் மரணத்தில் பயமிருக்காது. வாழ்க்கையின் சுவாரஸ்யமே நடக்கப்போவது தெரியாமல் இருப்பதுதான்.

'அப்படியானால் என் கனவுக்கு என்ன அர்த்தம்?'

'கனவுகளுக்கு அர்த்தம் எதுவும் கிடையாது. நம் அடிமனத்தில் இருக்கும் பயங்களும் நிராசைகளுமே கனவாக வெளிப்படுகின்றன.' மனைவிக்கு விளக்கமாக பதில் சொன்ன பாண்டியனுக்கும் நடக்கப்போவது தெரிந்திருக்கவில்லை.

அவன் பேசிக்கொண்டிருக்கிறபோது கண்ணகி அரண்மனை வாயிலுக்கு வந்து சேர்ந்தாள். வாயிற்காப்போனைப் பார்த்துச் சீறினாள்.

'நீதி தவறிய ஓர் அறிவிலி அரசனின் வாயிற்காப்போனோ கணவனை இழந்த பெண் ஒருத்தி ஒற்றைச் சிலம்பை மட்டும் கையில் ஏந்தி வந்திருக்கிறாள் என்று உன் அரசனிடம் போய்ச் சொல்'

இப்படி அரசனைப் பற்றி இழிவாக ஒருவர் பேசுவதை ஓர் அரசாங்க ஊழியன் அனுமதிக்கக்கூடாது அது தேசத் துரோகம்.

ஆனால் கண்ணகியின் தோற்றமும் குரலும் அவள் கண்ணில் இருந்த கனலும் வாயிற்காவலனைத் திகிலடையச் செய்தது. தட்டுத்தடுமாறி உள்ளே ஓடினான்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போர்களின் பூமி உக்ரைன் அதன் வரலாற்றுப் பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 91

ஆனால், உக்ரைனின் புவியியல் அமைப்பு ஐரோப்பாவையும் ரஷ்யாவையும் உள்ளடக்கியது. ஒரு புறத்தில் ரஷ்யாவையும் மறு புறத்தில் ஐரோப்பிய நாடுகளையும் உக்ரைன் எல்லையாக கொண்டிருக்கிறது.

**ரஷ்யா - உக்ரைன் இடையேயான மோதல் போக்கு இன்று நேற்று அல்ல சோவியத் யூனியன் வீழ்ச்சியின் போதிருந்தே இருந்து வருகிறது. இதற்கு காரணம் உக்ரைனின் புவியியல் அமைப்பு ஐரோப்பாவையும் ரஷ்யாவையும் உள்ளடக்கியது.**

உக்ரைனின் மேற்குப் பகுதியில் வசிக்கும் மக்கள் மேற்கத்தேய நாடுகளுக்கு ஆதரவாகவும் கிழக்கு பகுதியில் வசிக்கும் மக்கள் ரஷ்யாவுக்கு ஆதரவாகவும் இருக்கின்றனர்.

உக்ரைனின் மொழி, கலாசாரங்கள் பெரும்பாலும் ரஷ்யாவுடன் ஒத்துப்போவதால் உக்ரைனை ரஷ்யா தன்னுடைய அங்கமாகவே கருதுகிறது. இதன் காரணமாகவே, 2014 ஆம் ஆண்டு ரஷ்யா ஆதரவு பெற்ற ஜனாதிபதி விக்டர் யானுகோவிச் மக்கள் போராட்டத்தால் பதவி நீக்கம் செய்யப்பட்டார். அதே காலகட்டத்தில், அதாவது 2014 ஆம் ஆண்டு உக்ரைனின் கிரிமியா தீபகற்பத்தை ரஷ்யா கைப்பற்றியது. ரஷ்யாவின் தூண்டுதலின் பேரில் கிழக்கு உக்ரைனில் கிளர்ச்சியாளர்கள் உக்ரைன் படைகளோடு இன்றும் சண்டையிட்டு வருகின்றனர்.

**உக்ரைனின் கிழக்கு பகுதியில் வசிக்கும் மக்கள் ரஷ்யாவுக்கு ஆதரவாக இருந்ததால் கிரிமியா தீபகற்பத்தை ரஷ்யா இலகுவாக கைப்பற்றியது. ஆனால் மேற்குப் பகுதியில் வசிக்கும் மக்கள் மேற்கத்தேய நாடுகளுக்கு ஆதரவானவர்கள்.**

ரஷ்யாவை பொறுத்தவரை உக்ரைனில் மேற்கத்தேய நாடுகளின் ஆதிக்கத்தை அவர்கள் விரும்பவில்லை. ஆனால்,

**உக்ரைன் ரஷ்யாவின் கட்டுப்பாட்டுக்குள் சென்றால் கிழக்கு ஐரோப்பிய பிராந்தியத்தில் பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்படும் என அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட மேற்கத்தேய நாடுகள் கருதுகின்றன.**

இதனிடையே, "நேட்டோ" நாடுகள் கூட்டமைப்பில் இணைய உக்ரைன் ஆர்வமாக இருந்தது. இதற்கு அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளன. ஆனால், இதற்கு கடுமையான எதிர்ப்பு தெரிவித்த ரஷ்யா, இதனை மிகப் பெரிய அச்சுறுத்தலாகவே கருதியது.

உக்ரைன் மட்டுமல்ல, முன்னாள் சோவியத் குடியரசின் எந்த ஓர் உறுப்பு நாட்டையும் இணைக்க முற்படக்கூடாது. இதனால் ரஷ்யாவின் பாதுகாப்புக்கு ஆபத்துள்ளது என்று ரஷ்யா தெளிவுபடுத்தியது. மேலும், தங்களது கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் கிரிமியா தீபகற்பம் மீது ஆதிக்கம் செலுத்த உக்ரைன் முயற்சி செய்வதாக ரஷ்யா குற்றம் சாட்டியது.

**உக்ரைன் நேட்டோவுடன் இணைந்தால் ரஷ்யாவின் பாதுகாப்புக்கு ஆபத்துள்ளது என்று ரஷ்யா கருதுகிறது.**

இந்த சூழலில் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் முதல் ரஷ்யா தனது படைகளை உக்ரைன் எல்லையில் குவித்து வருகிறது. சுமார் 1 இலட்சத்துக்கும் மேற்பட்ட வீரர்கள் எல்லையில் குவிக்கப்பட்டதற்கு சாட்சியாக செயற்கைக்கோள் புகைப்படங்களும் வெளியாகின. இதனால், உக்ரைன் மீது எந்த நேரமும் ரஷ்யா படையெடுக்கலாம் என்ற அச்சம் நிலவியது.

**கடந்த ஆண்டு நவம்பர் மாதம் முதல் உக்ரைன் மீது எந்த நேரமும் ரஷ்யா படையெடுக்கலாம் என்ற அச்சம் நிலவியது.**

உக்ரைனுக்கு அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட நாடுகள் ஆதரவு தெரிவித்தன. அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுடன் நடத்திய பேச்சு வார்த்தையில் உக்ரைனுக்கு ஆதரவளிப்பது என முடிவானது. இதையடுத்து, 8,500 இராணுவ வீரர்களை உக்ரைனுக்கு அனுப்ப அமெரிக்கா தயார் நிலையில் வைத்தது. நேட்டோ படைகள் கிழக்கு ஐரோப்பாவில் படைகளை குவிக்க தொடங்கின. இதனால் போர் மேகங்கள் சூழ்ந்தன.

ஆனால், அமெரிக்காவும் நேட்டோ நாடுகளுமே தேவையற்ற பதற்றத்தை உண்டாக்குவதாக குற்றம்சாட்டிய ரஷ்யா, உக்ரைன் மீது படையெடுக்கும் எண்ணம் இல்லை என தெரிவித்தது.

அதேசமயம், ஐ.நா பாதுகாப்பு கவுன்சிலின் இரகசிய சிறப்பு அமர்வு உள் ளிட்ட பல்வேறு கட்ட பேச்சு வார்த் தையின் மூலம் இராஜாங்க ரீதியில் தீர்வு காண முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன. போர் நடந்தால் ஏராளமான உயிரிழப்புகளும், பொருளாதார நெருக்கடியும் ஏற்படும் என்பதால், இந்தப் பேச்சு வார்த்தைகள் நடந்தன.

(தொடரும்)

## தமிழகம், கேரளாவில் இந்து அமைப்பு தலைவர்களை கொல்ல சதித்திட்டம்

### உளவுத்துறை எச்சரிக்கை

(டில்லி)

தமிழகம் -கேரளாவில் இந்து அமைப்புகளின் தலைவர்களை கொல்ல சதித்திட்டம் தீட்டப்பட்டு உள்ளதாக மத்திய உளவு பிரிவு அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இதைத் தொடர்ந்து இந்த 2 மாநிலங்களிலும் இந்து இயக்க தலைவர்களின் வீடுகள் மற்றும் அவர்கள் செல்லும் இடங்களில் உஷாராக இருக்க பொலிஸார் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

,கேரள மாநிலத்தில் ஆர்.எஸ்.எஸ் தலைவர்கள் 5 பேரின் பெயர் பட்டியலை கொடுத்து அவர்களது உயிருக்கு ஆபத்து இருப்பதாக உளவு பிரிவினர் எச்சரித்து உள்ளனர். (நி)

## ரஷ்யாவின் ஆக்கிரமிப்புக்களை கண்டித்து புதிய பொருளாதாரத் தடை விதித்தது அமெரிக்கா

(வோஷிங்டன்)

உக்ரைன் பிராந்தியங்களை ரஷ்யாவுடன் இணைப்பதற்கான ஒப்பந்தங்களில் புடின் கையெழுத்திட்டதைத் தொடர்ந்து ரஷ்யாவுக்கு எதிராக அமெரிக்கா புதிய பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது.

உக்ரைனின் நான்கு பிராந்தியங்களை ரஷ்யாவுடன் இணைக்கும் வகையில் சுயபாணியிலான வாக்கெடுப்பை நடத்தியதற்காக ரஷ்யாவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் 278 பேர் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது. மேலும் அதன் பாதுகாப்புத் துறையோடு தொடர்புடைய 14 பேரையும் குறிவைத்துள்ளது.

ரஷ்யாவிற்கு வெளியிலும் அதன் இராணுவத்தையோ அல்லது உக்ரைனிய பிரதேசங்களை அதனுடன் இணைத்துக் கொள்வதையோ ஆதரிக்கும் அமைப்புகளையும் குறிவைப்பதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய ஆணையம் உருவாக்கப்பட்ட புதிய சுற்று தடைகள், உயர் தொழில்நுட்ப பொருட்கள் உட்பட அதிகமான பொருட்களை ரஷ்யாவுக்கு ஏற்றுமதி செய்வதிலிருந்து தடை செய்யவும் ரஷ்ய இறக்குமதிகளுக்கு மேலும் தடை விதிக்கவும் முன்மொழிகிறது.

அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், பிரித்தானியா மற்றும் பிற நாடுகள், தன்னலக் குழுக்கள் என்று அழைக்கப்படுபவை உட்பட 1,000 இற்கும் மேற்பட்ட ரஷ்ய தனி நபர்கள் மற்றும் வணிகங் களுக்கு தடைகளை விதித்துள்ளன.(நி)

## மீண்டும் சர்வதேச திரைப்பட விழாவில் விஜய் சேதுபதி திரைப்படம்



(வோஷிங்டன்)

அமெரிக்காவில் நடைபெறும் முக்கிய திரைப்பட விழாக்களில் ஒன்றாக கருதப்படும் அர்பா சர்வதேச திரைப்பட விழாவில் திரையிடுவதற்கான சிறந்த படங்களாக 5 படங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. இதில் விஜய் சேதுபதி நடிப்பில் வெளியான மாமனிதன் திரைப்படமும் இடம் பெற்றுள்ளது.

ஏற்கனவே மாமனிதன் படம் டோக்கியோ திரைப்பட விழாவில் திரையிடப்பட்டு சிறந்த ஆசியப்படத்துக்கான தங்கப்பதக்கம் விருதையும் பூடான் நாட்டில் நடந்த சர்வதேச திரைப்பட விழாவில் திரையிட்டு 4 விருதுகளையும் சிங்கப்பூர் பட விழாவில் திரையிடப்பட்டு 4 விருதுகளையும் பெற்றுள்ளது. (நி)

## தென்னாபிரிக்க ஜனாதிபதியை வரவேற்க தயாராகும் மன்னர்



(லண்டன்)

தனது ஆட்சியின் முதல் அரசு முறை பயணமாக பக்கிங்ஹாம் அரண்மனைக்கு வரும் தென்னாபிரிக்காவின் ஜனாதிபதி மற்றும் முதல் பெண்மணியை மன்னர் சார்லஸ் வரவேற்கிறார்.

நவம்பர் 22 முதல் 24 ஆம் திகதி வரை பிரித்தானியாவுக்கு வருவதற்கான அழைப்பை ஜனாதிபதி சிரில் ரமபோசா ஏற்றுக்கொண்டதாக அரண்மனை உறுதிப்படுத்தியுள்ளது. அவருடன் அவரது மனைவி ட்ஷெபோ மோட்செப் உடன் வருவார்.

ராணியின் இறுதி அரசு பயணம் 2019 ஆம் ஆண்டு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட்ட்ரம்ப் விருந்தினராக வரவேற்றதாகும். அதே வேளை, கொவிட்-19 தொற்று நோய் காரணமாக 2020 இல் ஜப்பானில் இருந்து ஒரு பயணம் இரத்து செய்யப்பட்டது.(நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவிரமடையும் கொரோனா தடுப்பூசி செலுத்துமாறு கோரிக்கை

(கொழும்பு)

நாட்டில் கொரோனாத் தடுப்பூசியை ஏற்றிக்கொள்வதில் மக்கள் ஆர்வம் காட்டவில்லை. இதன் விளைவுகளை மக்கள் எதிர்நோக்க நேரிடும் என்று தொற்றுநோய் விஞ்ஞானப் பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் சமித கினிகே தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது. 60 வயதைக் கடந்தவர்கள் மற்றும் நாட்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கொரோனாத் தொற்றுக் காரணமாக நோய் நிலைமைகள் அதிகரித்தல் மற்றும் உயிரிழப்புக்கள் ஏற்படக்கூடிய சாத்தியங்கள் அதிகம்.

எதிர்வரும் டிசெம்பர் மாதத்துடன் ஏற்படக்கூடிய கால நிலை மாற்றத்தால் மீண்டும் கொரோனா வேகமாக பரவும். இது 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்குப் பாதிப்பாக அமையும் . அதனால் கொரோனாத் தடுப்பூசிகளை ஏற்றிக்கொள்வதில் அலட்சியம் காட்டக்கூடாது என அவர் தெரிவித்தார். (நி)

# வேலைவாய்ப்பற்றோர் எண்ணிக்கை இலங்கையில் அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கையில் வேலை வாய்ப்பற்றோர் எண்ணிக்கையில் அதிகரிப்பு பதிவாகியுள்ளதாக புள்ளி விபரத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த ஜூன் மாதத்துடன் நிறைவடைந்த இரண்டாம் காலாண்டுப் பகுதியில் வேலை வாய்ப்பு இல்லாதவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

வட்டி வீத உயர்வு, இறக்குமதிக்கான கட்டுப்பாடுகள், பணவீக்கம் உள்ளிட்ட பல காரணிகளினால் இந்த நிலைமை உருவாகியுள்ளது.

முதலாம் காலாண்டில் வேலை வாய்ப்பற்றோர் எண்ணிக்கை 4.3 வீதமாக காணப்பட்டதாகவும் இரண்டாம் காலாண்டில் இது 4.6 வீதமாக உயர்வடைந்துள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டில் நிலவி வரும் கடுமையான பொருளாதார நெருக்கடி நிலைமைகளினால் முழுமையான அளவில் முயற்சியாண்மைகளை மூட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (நி)

# குறைந்த வருமானம் கொண்ட நாடாக இலங்கையை தரம் குறைக்க உலக வங்கி யோசனை

(கொழும்பு)

நடுத்தர வருமானம் கொண்ட நாடு என்ற தரத்தில் இருந்து குறைந்த வருமானம் கொண்ட நாடாக இலங்கையை தரம்குறைப்பதற்கு உலக வங்கி யோசனை முன் வைத்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார்.

இதற்கு முன்னதாக, இந்தியாவும் இந்த யோசனையை இலங்கை அதிகாரிகளிடம் சமர்ப்பித்திருந்தது.

இலங்கை பாரிய நிதி நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ளதுடன் வெளிநாட்டுக் கடன்களை மீளச் செலுத்துவதும் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் கடன் மறுசீரமைப்புக்கான கோரிக்கைகள் வழங்கும் நாடுகளிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது மற்றும் சில தரப்பினர் அதற்கு இன்னும் உடன்படவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

குறைந்த வருமானம் கொண்ட நாடாக வகைப்படுத்துவதன் மூலம், நெருக்கடியை சமாளிக்க உதவி மற்றும் குறைந்த வட்டியில் கடன்களை பெறுவதற்கு சாதகமாக அமையும் என உலக வங்கி பிரதிநிதிகள் இலங்கை அரசாங்கத்திற்கு அறிவித்துள்ளனர்.

இந்த யோசனையை அரசாங்கம் தற்போது பரிசீலித்து வருகிறது. குறைந்த வருமானம் கொண்ட நாடு என வகைப்படுத்துவது உதவிகளைப் பெறுவதில் சாதகமான சூழ்நிலையை உருவாக்கினாலும் முழுப்பொருளாதாரத்திலும் ஏற்படும் பாதிப்பை ஆழமாகப் பரிசீலிக்க வேண்டும் என்று அரசாங்கம் கருதுகிறது. (நி)

# 45 ஆயிரம் மாணவர்களை உள்வாங்க எதிர்பார்ப்பு

## பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

(கொழும்பு)

2021 இற்கான க.பொ.த உயர்தர பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான பல்கலைக்கழக விண்ணப்பங்கள் தொடர்பான தகவல்கள் வெளியாகியுள்ளன. இம்முறை பல்கலைக்கழக அனுமதிக்காக சுமார் 93,000 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதேவேளை இவற்றில் சுமார் 45,000 மாணவர்களை பல்கலைக்கழகங்களில் இணைத்துக் கொள்வதற்கு எதிர்பார்ப்பதாக ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க சுட்டிக்காட்டியுள்ளார். (நி)

# பாடப்புத்தகங்கள் அச்சிட பணமில்லை

## கல்வி அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

2023 ஆம் ஆண்டுக்கான பாடசாலை மாணவர்களுக்குத் தேவையான 33 இலட்சம் பாடப்புத்தகங்களை அச்சிடாமல் இருக்க கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

பாடப்புத்தகங்கள் அச்சிடுவதற்கு 1600 கோடி ரூபாய் செலவிடவேண்டியுள்ளதாலும் காகிதத் தட்டுப்பாடு காரணமாகவும் இந்த நடவடிக்கையை எடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக அதன் முதன்மைச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

அதன்படி பழைய பாடப் புத்தகங்களை சேகரித்து மாணவர்களுக்கு வழங்கும் பணியில் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார். (நி)

# அனைத்துப் பாடசாலைகளிலும் முதலாம் தரத்தில் இருந்து ஆங்கிலம் கற்பிக்கப்படும்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் அடுத்த வருடம் முதல் அனைத்துப் பாடசாலைகளிலும் முதலாம் ஆண்டு முதல் ஆங்கிலம் கற்பிக்கப்படும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

பாராளுமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை உரையாற்றும் போதே, கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த இதனைத் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, உத்தேச கல்வி சீர்திருத்தத்தின் கீழ், முதலாம் தரத்தில் இருந்து பிள்ளைகளுக்கு ஆங்கிலம் கற்பிக்கும் பணி அடுத்த வருடம் மார்ச் மாதம் முதல் ஆரம்பிக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# தங்கத்தின் விலையில் நாளுக்கு நாள் பாரிய வீழ்ச்சி

(கொழும்பு)

வரலாறு காணாத விலை உயர்வை அடைந்திருந்த தங்கத்தின் விலை தற்போது படிப்படியாக குறைவடைந்து வருகின்றது.

இந்த நிலையில் உலக சந்தையில் நாளுக்கு நாள் தங்கத்தின் விலை ஏற்ற இறக்கத்துடன் பதிவாகி வருகின்றது.

இதன்படி நேற்று ஒரு அவுன்ஸ் தங்கத்தின் விலை இலங்கை ரூபாவின் படி 605,891 ரூபாவாக பதிவாகியுள்ளது.

இலங்கையில் கடந்த மாதங்களை விட தற்போது தங்கத்தின் விலையில் நாளுக்கு நாள் வீழ்ச்சி பதிவாகி வருகின்றது. (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1983 இந்து நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 34 ½ சூரி , செவ் 8 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L<br>அலுவலக பணியாளர் (அரச)<br>எதிர்பார்ப்பு:சாதாரண படித்த பெண்<br>காரைநகர் விரும்பதக்கது<br>தொ.இ: B/9324 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: அனுசம் 1<br>கி.பா: 25 சூரி 3 செவ் 2 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:BSc விஞ்ஞான ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: Bsc பட்டதாரி<br>தொ.இ:G/9897 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 4<br>கி.பா: 16 ½ சூரி 5 செவ் 6 இல்<br>உயரம்: 168 cm<br>தகைமை/தொழில்: Civil engineer Singapore.BSc,Msc<br>எதிர்பார்ப்பு:வைத்தியர், எஞ்சினியர், கணக்காளர்.<br>தொ.இ: B/11602 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 34 ½ சூரி, செவ் 8 இல்<br>உயரம் 5'2"<br>தகைமை/தொழில்: A/L<br>அலுவலக பணியாளர் (அரச)<br>எதிர்பார்ப்பு:சாதாரண படித்த பெண்<br>காரைநகர் விரும்பத்தக்கது<br>தொ.இ:G/11247 |
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 3<br>கி.பா: 31 ½ சூரி 6 செவ் 4 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்:Computer Engineer<br>எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்<br>தொ.இ:B/11896 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: பூசம் 3<br>கி.பா: 23 ¼ சூரி 5 செவ் 2 இல்<br>உயரம் : 5'4"<br>தகைமை/தொழில்:BA பட்டதாரி ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்<br>தொ.இ:G/11592 |
| பிறப்பு:- 1987 இந்து நட்சத்திரம்: சுவாதி 4<br>கி.பா: 39 சூரி, செவ் 11 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/ தொழில்: BSc,MSc பட்டதாரி.<br>தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உத்தியோகத்தர். SLI.C.T SERVICE (அரச)<br>எதிர்பார்ப்பு :பட்டதாரி. அரச உத்தியோகம்<br>தொ.இ: B/11158 | பிறப்பு:1990 இந்து<br>நட்சத்திரம்: மகம் 1<br>கி.பா: 52 சூரி 10 செவ் 7 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: A/L, IELTS<br>எதிர்பார்ப்பு :-வெளிநாடு மட்டும் லண்டன் விரும்பத்தக்கது<br>தொ.இ:G/10366 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமக்கு மிகவும் பிடித்தமான காட்சிகள் எப்போதும் நம் துயரமான சிந்தனைகளை வெளியே சொல்வனவாகவே அமைந்துள்ளன. – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## யாழ்.பல்கலைக்கழக மாணவர்களே! போதையைத் தடுக்க களமிறங்குங்கள்

அன்பார்ந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களே!

எங்கள் இனத்தின் மொட்டுக்களைக் கருகச் செய்கின்ற மிகக் கொடும் செயல் நடந்தாகிறது.

போதைவஸ்துப் பாவனை ஊடாக இந்தச் சதி வேலை அமுலாகியுள்ளது.

எழுச்சியோடு போராடிய தமிழ் இனத்தை – வெளிநாடுகளில் கோலோச்சவல்ல எங்கள் ஈழத் தமிழனைப் பார்க்கப் பொறாத வஞ்சகக் கூட்டம், போதைவஸ்துப் பாவனையூடாக எம் இனத்தின் மொட்டுக்களைக் கருகச் செய்யக் கங்கணம் கட்டி நிற்கிறது.

அரும்பும் மொட்டுக்களைக் கருக்கிவிட்டால் பூ, பிஞ்சு, காய், கனி என்ற கட்டங்களை இல்லாமல் செய்துவிடலாம். அதன்மூலம் தமிழ் இனத்தின் மூலவேரை வெட்டிவிடுகின்ற மிகப்பெரும் கொடுமை அரங்கேற்றப்படுகிறது.

இந்த நேரத்தில் நாம் விழிப்போடு செயற்படாவிட்டால், அந்தோ! எங்கள் மறவர்களின் தியாகங்கள். புலம்பெயர் நாடுகளில் வாழுகின்ற எங்கள் உறவுகளின் கனவுகள். ஏன்? இலங்கைத் திருநாட்டின் மூத்த தமிழ்க் குடிகளின் இருப்பு என எல்லாமும் வெறுமையாய்ப் போய்விடும்.

ஆகையால் அன்புக்குரிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களே! எங்கள் மண்ணில் பரப்பப்பட்டுள்ள போதைவஸ்து எனும் கொடிய பேயை விரட்ட நீங்கள் களமிறங்க வேண்டும்.

நம் உறவுகளின் வீடுகள் தோறும் சென்று போதையை ஒழிக்க நடவடிக்கை எடுங்கள்.

பாடசாலைகள் தோறும் பயணம் செய்து மாணவர்களைச் சந்தியுங்கள். அவர்களோடு கலந்துரையாடுங்கள். விழிப்புக்கூட்டங்களை நடத்துங்கள்.

எங்கள் தாயக மண்ணில் உலாவரும் போதைப்பொருள் வியாபாரம் வருமானத்துக்கானதல்ல. அது தமிழினத்தை வேரறுப்பதற்கானதென்ற உண்மையை உரக்கச் சொல்லுங்கள்.

தமிழ் மாணவர்களின் கல்வியைக் கந்தறுக்கச் செய்யும் கயமைத்தனம்தான் அது வென்று இடித்துரையுங்கள்.

எங்கள் இனத்தின் வரலாற்றை இனப்பற்றுதலை கனிவாய்க் கூறுங்கள்.

துண்டுப்பிரசுரங்களை வெளியிடுங்கள். எங்களிடம் உள்ள அத்தனை ஊடகங்களையும் போதை ஒழிப்பின் பிரசார பீரங்கிகளாகப் பிரயோகியுங்கள்.

ஆம், அன்புக்குரிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களே!

எங்கள் மண்ணில் போதைவஸ்து எனும் கொடிய பேய்கள் நம் இளம் பிள்ளைகளின் குருதியைக் குடிக்கின்ற கொடுமை அறிந்தும் நீங்கள் கூடி ஆராயாததன் காரணம்தான் என்ன?

இன்னமும் தாமதிக்க வேண்டாம். பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், கல்விசாரா உத்தியோகத்தர்கள் என அனைத்துத் தரப்பினரையும் திரட்டுங்கள் – களமிறக்குங்கள்.

நீங்கள் களமிறங்கினால் நிச்சயம் நம் இளைஞர்கள், மாணவர்கள் விழிப்படைவர்.

அதொன்றுபோதும் நம் தமிழினத்தைப் பாதுகாக்க. எங்கே தயாராகுங்கள்.

# இலங்கை பொருளாதாரம் அடுத்த ஆண்டு மோசமடையும்

## பேராசிரியர் ஜனக்குமாரசிங்க எச்சரிக்கை

**(கொழும்பு) இலங்கைப் பொருளாதாரமானது அடுத்த ஆண்டில் 10 பில்லியன் டொலர்களுக்கும் மேல் சுருங்கக்கூடும் என உலக வங்கி எச்சரித்துள்ளதாகவும் இதன் மூலம் இலங்கை மிக மோசமான பொருளாதார நிலைமையை நோக்கி தள்ளப்படக்கூடும் எனவும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக் கழகத்தின் வர்த்தக கற்கைப் பிரிவின் பொறுப்பாளர் பேராசிரியர் ஜனக்குமாரசிங்க தெரிவித்துள்ளார்.**

அத்துடன் அரசாங்கம் வரிகளை அதிகரித்தால், பொருளாதார சரிவு வேகம் அதிகரிக்கும் என்பதுடன் வங்கி உட்பட நிதிக் கட்டமைப்புகள் மட்டுமின்றி அவற்றுடன் தொடர்புடைய ஏனைய நிறுவனங்களும் ஆபத்திற்கு உள்ளாகலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

அரசாங்கம் மேலும் வரிகளை அதிகரிக்க முயற்சித்தால் அது முழு நாட்டு மக்களின் வாழ்வை நேரடியாகப் பாதிக்கும். அதேபோல் வட்டி வீதத்தை அதிகரித்து பணவீக்கத்தை கட்டுப்படுத்த முயற்சித்து வருகின்றனர்.

அது இலங்கை மத்திய வங்கி எடுக்க வேண்டிய நடவடிக்கை. எனினும் அது பொருளாதாரத்தில் அதிர்வை ஏற்படுத்தும். பொருளாதாரத்திற்கு ஏற்படும் இந்த அதிர்வு ஏனையவற்றிலும் பிரதிபலிக்கும்.

வர்த்தகர்களுக்கு பிரதான பாதிப்பு ஏற்படும். அவர்கள் வங்கியில் கடன்களை பெற்றே மூலதனத்தை திரட்டுகின்றனர்.

வங்கியில் கடனை பெற செலவு செய்ய வேண்டும். அபிவிருத்தியடைந்து வரும் நாடு ஒன்றின் முதலீடுகள் மூலம் கிடைக்கும் பிரதி பலன்களில் 10 முதல் 15 வீதமான இலாபமே கிடைக்கின்றது.

வட்டி 25 வீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த வட்டியில் கடனை பெற்று முதலீடு செய்து, அதன் மூலம் கிடைக்கும் இலாபமானது, பெற்ற கடனுக்கான வட்டியை செலுத்தவும் போதுமானதாக இருக்காது.

புதிதாக வர்த்தகங்களை ஆரம்பிப்பது சீர்குலைந்து போயுள்ளது. இதனால், இலங்கைப் பொருளாதாரம் சரிந்து வருகிறது. உலக வங்கியின் கணிப்புகளின்படி அடுத்த ஆண்டில் இலங்கை 10 பில்லியன் டொலருக்கும் மேலான பொருளாதார சரிவை சந்திக்கும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

இப்படியான நிலைமையில், பொருளாதாரத்தை கட்டியெழுப்புவது மற்றும் பொருளாதாரத்தை முன்நோக்கி தள்ளும் வங்கி உட்பட நிதிக் கட்டமைப்புகள் மட்டுமின்றி அவற்றுடன் சம்பந்தப்பட்ட ஏனைய நிறுவனங்களும் பெரிய ஆபத்தை சந்திக்கலாம் எனவும் பேராசிரியர் ஜனக்குமாரசிங்க மேலும் தெரிவித்துள்ளார். (நி)

## தொழிற்சந்தை

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையில் தொழிற் கல்வியினை நிறைவு செய்த பயிலுநர்களிற்கான வெளிநாட்டு உள்நாட்டு வேலை வாய்ப்பினை வழங்குவதற்கான் தொழிற்சந்தை நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 8.30 மணியில் இருந்து மதியம் 12 மணிவரை யாழ்ப்பாணம் நூலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது என இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை யாழ். உதவிப் பணிப்பாளர் கு.நிரஞ்சன் தெரிவித்துள்ளார். (நி-6)

## மானம்பூத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் திருநெல்வேலி கரியபுலம் ஞானவைரவர் ஆலயத்தில் நாளை புதன்கிழமை காலை 7.30 மணிக்கு விஜயதசமி விழா இடம் பெறவுள்ளது.

இவ் விழாவில் திருநெல்வேலி அரசடி ஸ்ரீ சிவாக சுந்தரி அம்பாள் ஆலயத்திலிருந்து பலாலி வீதியூடாக திருப்பவனியும் நடைபெற்று குறித்த ஞானவைரவர் ஆலயத்தில் வன்னிவாழை வெட்டு வைபவமும் இடம்பெறவுள்ளது. (6)

(குப்பிழான்)

குப்பிழான் வீரமனை கன்னிமார் கௌரி அம்பாள் ஆலய வருடாந்த நவராத்திரி பூசை வழிபாட்டின் பத்தாம் நாளான மானம்பூத் திருவிழா (வாழைவெட்டு) நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம் பெறும். என மேற்படி ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (நி-6-18)

## எரிவாயு விலையில் மாற்றம் லிட்ரோ நிறுவனம் அறிவிப்பு

(கொழும்பு)

உள்நாட்டு எரிவாயு சிலிண்டர்களின் விலைகள் திருத்தப்படும் என லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.

அதற்கமைய ஒக்டோபர் 5ஆம் திகதி நள்ளிரவு முதல் உள்நாட்டு எரிவாயு சிலிண்டர்களின் விலைகள் திருத்தப்படும் என லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்துள்ளார். (நி)

## சித்திர வித்தியாரம்பம்

(யாழ்ப்பாணம்)

ஆத்திசூடி வீதி கந்தர் மடத்தில் இயங்கும் ஐ.ஏ.ரி சித்திரப்பயிற்சி நிறுவனத்தில் விஜயதசமி தினத்தை முன்னிட்டு நாளை புதன்கிழமை சித்திர வித்தியாரம்பம் நடைபெறவுள்ளது. எனவே பயில விரும்பும் மாணவர்கள் அன்றைய தினம் பிற்பகல் 4 மணிக்கு வருகை தருமாறு அந்நிறுவனத்தினர் அறிவித்துள்ளனர். (6)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன் கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை **யாழ். பிரதேசத்தில்** பிரிட்டிஷ் கவுன்சில்-ரக்கா வீதி, இயற்கை விஞ்ஞான பீடம், விஞ்ஞான பீடம், தியாகி அறக்கொடை நிலையம், றியோ கிரீம் ஹவுஸ், அரசடி பழம் வீதி, கைலாச பிள்ளையார் கோவில், நல்லூர் கோயில், நாவலர் வீதி இராசாவின் தோட்டம், பருத்தித்துறை வீதி ரக்கா வீதி சுண்டிக்குளி, இராம நாதன் வீதி புகையிரத குறுக்குச் சந்தி ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** ஜீவன் அரசி ஆலை, சுஜன் அரிசி ஆலை - காத்தான் தோட்டம், மகாறம்பைக்குளம் மறக்கறம்பளை-கணேசபுரம் ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில்** எருக்கலம்பிட்டி நீர் வழங்கல் திட்டம், கடற்படை முகாம் - ஓலைத்தொடுவாய், புதிய சில்க் ரோடு அகுடிக் கம்பெனி பிரைவேட் (லிமிடெட்) (கடல் உணவு களஞ்சியம்), கொன்னையன் குடியிருப்பு, மாலுவாடி சந்தி, ஓலைத்தொடுவாய் சணி கிராமம், தாழ்வுப்பாடு, தாராபுரம், தாராபரம் திட்டம், தோட்டவெளி ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முறிகண்டியில் விபத்து இருவர் படுகாயம்



(முறிகண்டி)
முல்லைத்தீவு மாவட்டதில் மாங்குளம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட முறிகண்டி பகுதியில் ஏ9 வீதியில் இடம்பெற்ற விபத்தில் இருவர் காயமடைந்துள்ளனர்.

குறித்த விபத்து நேற்று காலை 6 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இவ்விபத்து தொடர்பில் தெரியவருவதாவது, உணவகம் ஒன்றிலிருந்து ஏ9 வீதியை கடந்து கிளிநொச்சி நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளுடன் அதே திசையில் நேராக பயணித்த கார் மோதியுள்ளது.

குறித்த விபத்தின்போது, மோட்டார்சைக்கிளில் பயணித்த இருவர் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்விபத்து சம்பவத்தில் மோட்டார் சைக்கிள் மற்றும் கார் ஆகியன பலத்த சேதங்களுக்கு ள்ளாகியுள்ளன.

சம்பவம் தொடர்பில் மாங்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (நி-6-100-316-315)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 280 | 280 | 180 | 350 |
| உருளைக்கிழங்கு | 220 | 200 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 220 | 200 | 300 | 250 |
| தக்காளி | 250 | 250 | 260 | 260 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 230 | 160 | 200 |
| கோவா | 450 | 400 | 400 | 450 |
| கரட் | 250 | 400 | 400 | 450 |
| பூசணி | 200 | 150 | 160 | 200 |
| புடோல் | 200 | 200 | 200 | 240 |
| வாழைக்காய் | 200 | 160 | 150 | 120 |
| சின்ன வெங்காயம் | 400 | 380 | 400 | 450 |
| பெரிய வெங்காயம் | 180 | 180 | 200 | 200 |
| பாகற்காய் | 600 | 800 | 500 | 700 |
| வெண்டிக்காய் | 180 | 240 | 140 | 300 |
| கருணைக் கிழங்கு | 180 | 180 | 200 | 240 |
| பயற்றங்காய் | 400 | 400 | 300 | 350 |
| லீக்ஸ் | 300 | 380 | 300 | 350 |
| பீற்றூட் | 180 | 250 | 300 | 350 |
| கறிமிளகாய் | 800 | 700 | 600 | 700 |
| முருங்கைக்காய் | 800 | 500 | 500 | 600 |
| போஞ்சி | 600 | 400 | 450 | 500 |
| கத்தரிதம்புள்ள | 250 | 250 | --- | 300 |
| கீரை - 1 பிடி | 80 | 80 | 100 | 100 |
| தேசிக்காய் | 600 | 400 | 450 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 80 | 70 | 60-80 |
| இராசவள்ளி | 250 | 250 | 200 | 250 |
| வெங்காயப்பூ | 450 | 350 | 400 | 480 |
| முள்ளங்கி | 120 | 200 | 150 | 300 |
| பொன்னாங்காணி | 80 | 120 | 100 | 80 |
| வல்லாரை | 30 | 100 | 50 | 60 |
| ஈரப்பலா | 150 | 140 | 100 | 120 |

# காரைநகரில் கைதான இந்திய மீனவர்கள் விடுதலை

(கரணவாய்)
காரைநகர் கடற்பரப்பில் கைதான எட்டு இந்திய மீனவர்களையும் நிபந்தனையுடன் விடுதலை செய்தது ஊர்காவற்றுறை நீதிமன்று.

கடந்த இருபதாம் திகதி காரைநகர் கடற்பரப்பில் வைத்து கடற்படையினரினால் இந்திய இழுவைப் படகு ஒன்றில் இருந்த எட்டு பேர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவ்வழக்கு நேற்று திங்கட்கிழமை ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட போது நீரியல் வளத்துறையினர் இந்திய மீனவர்களுக்கு எதிராக மூன்று குற்றச்சாட்டுகளை வைத்து குற்றப்பத்திரம் தாக்கல் செய்தனர்.

குற்றச்சாட்டுகளை மீனவர்கள் ஏற்றுக் கொண்டதையடுத்து இந்த வழக்கினை விசாரித்த ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிவான் ஜெ.கஜநிதிபாலன் 3 குற்றச்சாட்டுகளுக்கும் தலா ஆறு மாத கால சிறைத்தண்டனை வீதம் 18 மாத சிறைத்தண்டனையை விதித்து அதனை ஐந்து வருடங்களுக்கு ஒத்தி வைத்தார்.

இழுவைப் படகு அரசுடமையாக்கப்பட்டுள்ளது.(6-60)


1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர். தனேந்திரன் நீலாதேவி
(Lion Lady)

பிறப்பு: 14.04.1957
இறப்பு: 14.10.2021



நான் இவ்வுலகை விட்டுச் சென்று ஓர் ஆண்டு ஆகின்றது. என் உடல் தான் அழிக்கப்பட்டதே தவிர எனது உயிர் உங்களுடன் உறவாடிக் கொண்டு இருக்கின்றது. உங்கள் இன்பத்திலும் துன்பத்திலும் நான் காவலனாக இருப்பேன்.

Lion கலாநிதி. நா.தனேந்திரன்
சமாதான நீதவான்
(யாழ். மாநகர சபை உறுப்பினர்)
பூமணி அம்மா அறக்கட்டளையின்
இலங்கைக்கான தலைவர்.

67/2 சீனிவாசன் றோட்,
கொட்டடி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மயங்கி விழுந்...

யில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் ஊர்காவற்துறையைச் சேர்ந்த அந்தோனி யேசுதாஸ் (வயது - 61) என்ற 3 பிள்ளைகளின் தந்தையே மரணமடைந்தவராவார்.

இவர் கடந்த 7 நாட்களாக காய்ச்சல் காரணமாக பாதிக்கப்பட்ட நிலையில் நேற்று வீட்டில் மயங்கி விழுந்துள்ளார்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டநிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று மரணமடைந்துள்ளார்.

மரணவிசாரணையை யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரணவிசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டதுடன் நிமோனியா காச்சலால் இறந்ததாக அறிக்கையிடப்பட்டுள்ளது. (ம-7,60)

## வரணியில் அம்மி...

ளாக காய்ச்சல் காரணமாக மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று இரவு மரணமடைந்தார்

மரணவிசாரணையை யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரணவிசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார்மேற்கொண்டார். (ம-7,60)

## டீசலின் விலையை...

பெற்றோல் இறக்குமதியில் இலாபம் கிடைக்கப் பெற்றதால் விலை குறைக்கப்பட்டுள்ளது. தற்போதைய நிலையில் டீசலின் விலையை குறைக்க முடியாது என வலுசக்தி மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

பாராளுமன்றில் திங்கட்கிழமை இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினாக்களின் போது எதிர்க்கட்சியின் உறுப்பினர் முன்வைத்த கேள்விக்கு பதிலளிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (ம-7)

## மோ. சைக்கிள்...

களின் தந்தையே உயிரிழந்தவராவார்.

கடந்த 1ஆம் திகதி மோட்டார் சைக்கிளில் பயணித்த போது புளியம்பொக்கணைப் பகுதியில் மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளானதில் குறித்த நபர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் நேற்றுக் காலை மரணமடைந்தார்.

மரணவிசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை திடீர் மரணவிசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (ம-7,60,316)

## நொதேன்...

குறித்த நிகழ்வானது நாளை காலை 9.45 மணியளவில் நொதேன் சென்றல் வைத்தியசாலை வளாகத்தில் இடம்பெறவுள்ளது. (ம-7)

## மாவின் விலை...

தெரிவித்தார்.

கோதுமை மாவு கொள்கலன்கள் கொழும்பு துறைமுகத்திற்கு வந்துள்ளதாகவும் அவற்றை இறக்கும் பணி ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

கோதுமை மாவு தொடர்பில் பாரிய பிரச்சினை இருப்பதை தான் ஒப்புக்கொள்வதாக தெரிவித்தார் நளின் பெர்னாண்டோ.

'அதேவேளை லிற்றோ சமையல் எரிவாயுவின் விலை, புதன்கிழமை நள்ளிரவு முதல் குறைக்கப்படும் என அந்நிறுவனத்தின் தலைவர் தெரிவித்தார். (ம-7)

## கருத்து சுதந்திர...

GSP+ உறுதிமொழிகளை ஐரோப்பிய ஒன்றியம் மிக விரைவில் ஆராயும் என உர்சுலா அனுப்பியுள்ள செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் அறிக்கை இந்த ஆண்டின் இறுதியில் அல்லது 2023ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. அனைத்து இலங்கையர்களின் குறுகிய, நீண்ட கால தேவைகளை உறுதிப்படுத்தும் கொள்கைகளை அறிமுகப்படுத்தி இந்த அறிக்கை இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ம-7)

## போதையை கட்டு...

பாதுகாப்பு அமைச்சு, இராணுவம், பொலிஸ் மற்றும் மேலும் சில நிறுவனங்களின் பங்களிப்புடன் இந்த செயலணி உருவாக்கப்படுமென அமைச்சர் கூறியுள்ளார். (ம-7)

# நாவற்குழியில் தாய், மகனை கட்டிவைத்து தாக்கிவிட்டு

## பணம், பொருட்கள் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

யாழ். நாவற்குழி பகுதியில் நேற்று பட்டப்பகலில் வீடொன்றுக்குள் புகுந்த திருடர்கள் வீட்டிலிருந்த தாய் மற்றும் மகனை கட்டிவைத்து தாக்கிவிட்டு வீட்டிலிருந்த பொருட்கள் மற்றும் பணம் ஆகியவற்றை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர் என சாவகச்சேரி பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவத்தில் படுகாயமடைந்த தாயும், மகனும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நாவற்குழி மேற்கு, சித்தி விநாயகர் கோவிலடி பகுதியில் உள்ள வீடொன்றிற்குள் நேற்றுப் புகுந்த கொள்ளையர்கள், வீட்டிலிருந்த தாயையும், மகனையும் கொடூரமாக தாக்கியுள்ளனர்.

கொள்ளையர்களின் தாக்குதலில் 17 வயதான மகனின் கை முறிந்துள்ளதுடன், 42 வயதான தாயின் தலையில் காயம் ஏற்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

காயமடைந்த தாயும் மகனும், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளார்கள். (ம-7,104)

## யாழில் நாளுக்கு...

மையாகியுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் போதைப் பாவனையால் அண்மையில் பலர் உயிரிழந்துள்ளனர்.

பெண்கள் உட்பட பலர் போதைப் பாவனைக்கு அடிமையாகியுள்ளனர்.

போதைப் பாவனையை கட்டுப்படுத்த சமூக மட்டத்தில் அனைவரும் முன்வர வேண்டும் என்று கோரிக்கை விடப்பட்டுள்ளது. (ம-7)

## இளம் குடும்பஸ்...

சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவர் கடந்த 4 நாட்களுக்கு முன்பே சுவிஸில் இருந்து நாடு திரும்பியவராவார்.

இது தொடர்பான விசாரணையை யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரணவிசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-7)

## ஐ.நா...

கியுள்ளன.

அமெரிக்கா கனடா ஜேர்மனி பிரித்தானியா மலாவி மொன்டிநீக்ரோ வடமசடோனியா ஆகிய நாடுகள் இலங்கை குறித்த தீர்மானத்திற்கு இணை அனுசரணை வழங்கியுள்ளன. புதிய தீர்மானம் நிறைவேற்றப்படுவதை தடுக்க முடியும் என தேவையற்ற நம்பிக்கையை கொண்டிருக்கவில்லை என வெளிவிவகார அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இலங்கை குறித்த இந்த தீர்மானம் இலங்கையின் பொறுப்புக்கூறல் மனித உரிமைமீறல் தொடர்பில் ஆதாரங்களை சேகரிக்கும்பொறிமுறையை வலுப்படுத்துமாறு வேண்டுகோள் விடுக்கின்றது.

கடந்த வருட தீர்மானத்தின் அடிப்படையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் இந்த பொறிமுறையை உருவாக்கியுள்ளது. (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2022/10/03
சீட்டிழுப்பு இலக்கம் 4897
ஆங்கில எழுத்து M வெல்லப்பட்ட இலக்கங்கள் 4 6 8 2 4 4
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.10.03
சீட்டிழுப்பு இலக்கம் 206
மீனம் 33 44 53 56 மீனம்
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 03/10/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1245
வெற்றி எழுத்து T சுப்பர் இலக்க 02 வெற்றி இலக்கங்கள் 24 46 64 80

கொவிசெத Govisetha
திகதி 2022.10.03
சீட்டிழுப்பு இலக்கம் 3139
ஆங்கில எழுத்து Q வெற்றி இலக்கங்கள் 13 31 46 47
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2022.10.03
சீட்டிழுப்பு இலக்கம் - 927
K 04 07 20 41
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
NATIONAL LOTTERIES BOARD
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4314
உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 456 9416

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 03/10/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1352
வெற்றி இலக்கங்கள்
மிதுனம் 5 6 0 5 5 3
தேசிய லொத்தர் சபை

அத கோடிபதி ADA KOTIPATHI
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு இல: 1698
வர்ணம்: சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2022.10.03
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,442,420/-
வெற்றி இலக்கங்கள் 12 26 64 66 ஆங்கில எழுத்து R
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா Shanida
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2022.10.03
சீட்டிழுப்பு இல: 4033
வர்ணம்: நீலம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,242,020/-
வெற்றி இலக்கங்கள் 19 26 66 72 ஆங்கில எழுத்து V
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

லக்கி 26 வசனா
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
P 08 36 57 62 74
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 1048
வர்ணம் இள நீலம்
திகதி 2022.10.03 திங்கட்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 266,744,285.80
தொலை பேசி: 011-2 333 546-47
Web: www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ஜயோதா Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1858
சீட்டிழுப்பு திகதி 2022-10-03
வெற்றி இலக்கங்கள் 06 13 36 38 ஆங்கில எழுத்து U
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 35,925,900/-
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

SUPER BALL சுப்பர் போல
சீட்டிழுப்பு வாரம் 1872
நிறம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2022.10.03
தினம் திங்கட்கிழமை
G 34 49 64 71
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,600,420/-
அபிவிருத்தி லொத்தர் சபை

ராசி அதிர்ஷ்டம்
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,136,030.80
திகதி 2022-10-03
வெற்றி வாரம் 3584
வர்ணம் மஞ்சள்
வெற்றி இலக்கங்கள் 10 13 55 59
கடகம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 8,119,480/-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் தாவடி சந்திக்கு அருகாமையில் 2 பரப்பு காணி விற்பனைக்கு**

- K.K.S வீதியில் இருந்து இரண்டாவது காணி
- பார்வையிடும் நேரம்:- காலை 9.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை

(12992)

தொடர்பு
**076 755 8606**


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்


## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (12989) **076 825 7716** (ஆகாஸ்)

## கம்சப்பிரியா இசைக் கல்லூரி

வட.மா/க/அ/பண்/யாழ்/2015/02
DCA/06/04/01/JAF/043
இல.30, கிருஸ்ணப்பிள்ளை வீதி, ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்.

**விஜயதசமி நாள் வகுப்பு - புதன்கிழமை (05.10.2022)**
மாலை 4.00 - 6.00 வரை

புதிய பிரிவுகள் ஆரம்பம்: வயலின், வீணை, புல்லாங்குழல், ஓர்கன், வாய்ப்பாடு (கர்நாடக சங்கீதம்), கிற்றார்

(12976) தொடர்புகளுக்கு:- **ஆசிரியர் 077 481 9795**

## புலமை கல்வி நிறுவனம்
## Pulamai Institute - Manipay

தரம் - 4 (தற்போது தரம் 03), தரம் - 5 (தற்போது தரம் 04)
மாணவர்களுக்கான புலமைப்பரிசில் புதிய வகுப்புக்கள்
**விஜயதசமி** அன்று ஆரம்பமாகின்றன.

**தரம் - 04 (தற்போது தரம் - 03)**
**தரம் - 05 (தற்போது தரம் - 04)**

**ஆசிரியர் - திரு.க.கலாமோகன்**
(B.A, P.G.D.E.Dip in Teach...)



காலம்:- **05.10.2022** (புதன்கிழமை)
விஜயதசமி புதிய வகுப்பு ஆரம்பம்

நேரம்:- தரம் - 4 (தற்போது தரம் 03) பி.ப 4.00
தரம் - 5 (தற்போது தரம் - 04) பி.ப 5.00

மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள் வழங்க உள்ளதால் உடன் பதிவுக்கு முந்துங்கள்

தொ.இல - **077 212 1915**
சோதிவேம்படி லேன், மானிப்பாய். (12987)

## ANNAI MUTHTHUMARI
## அன்னை முத்துமாரி
(Village Hotel)

COLOMBO ⇌ JAFFNA ⇌ VALVETITHURAI

**RS.3000**
Direct Booking
நேரடி ஆசனப் பதிவு



தொடர்புகளுக்கு
BOOKING NUMBER
**077 544 8503**

(12979)

## விற்பனை உதவியாளர் தேவை (பெண்கள்)

நல்லூரில் உள்ள குழந்தைகளுக்கான விற்பனை நிலையம் ஒன்றிற்கு விற்பனை உதவியாளர் பெண்கள் வேலைக்குத் தேவை.

Note:- யாழ்.மாநகர எல்லைக்குள் வசிப்பவர்கள் மற்றும் கணினி அறிவுள்ளவர்கள் விரும்பத்தக்கது. (C-5024)

தொடர்பு:- **076 166 1986**


# யாழில் போதையுடன் இளைஞன் கைது

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியை அண்மித்த பகுதியில் போதைப்பொருளுடன் இளைஞன் ஒருவர் நேற்றுத் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் குறித்த இளைஞன் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட இளைஞனை யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்திருந்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,33)

# பாம்புக்கடிக்கிலக்கான பெண் மரணம்

பாம்புக் கடிக்கு இலக்கான பெண் ஒருவர் நேற்று திங்கட்கிழமை காலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். பளை-இந்திரபுரம் பகுதியைச் சேர்ந்த 67 வயதான பெண் ஒருவரே இவ்வாறு மூன்று தினங்களுக்கு முன்பாக பாம்புக்கடிக்கு இலக்காகி பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் மேலதிக சிகிச்சைக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டபோது வழியில் உயிரிழந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.(ம-7,30)


# வேலைவாய்ப்பு

எமது புடவை நிறுவனத்திற்கு பின்வரும் வெற்றிடங்களுக்கு பொருத்தமானவர்கள் தேவை.

01. முகாமையாளர் - 01 (முன்னனுபவம் விரும்பத்தக்கது)
02. Digital Marketing Officer - 01
03. விற்பனையாளர் :- ஆண் - 02, பெண் - 02



தொடர்புகளுக்கு
**077 855 4840**
இடம் - யாழ்.நகர் (12990)

# SPOKEN ENGLISH

புதிய பிரிவுகள் விஜயதசமி அன்று ஆரம்பம்
**05.10.2022 காலை 10 மணிக்கு**

- ஒரு பிரிவில் 5 பேர் மட்டுமே.
- உங்களுக்கேற்ற நேரத் தெரிவுகள்.
- 3 மாத கால பயிற்சிகள்.
- பயிற்சி முடிவில் பெறுமதிமிக்க சான்றிதழ்கள்.

**077 395 0857**
**Winstar Consultants (Pvt) Ltd**
No.45, Vembadi Street, Jaffna. (12983)

## பகுதிநேர வேலைவாய்ப்புகள்

M.S Word, சமூக வலைத்தளங்களில் பரந்த அறிவுள்ள 5 பணியாளர்கள் உடன் தேவை.

**வயதெல்லை: 18 - 28**

விரும்புவோர் உங்கள் சுயவிபரக்கோவையினை Viber / Whatsapp இற்கு அனுப்புங்கள்.

(12982)

Viber / Whatsapp **070 461 4192**

# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 13 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு)**

- 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்.
- திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.

## பார்வையிடும் நேரம்

காலை 6.00 மணி முதல்
மாலை 6.00 மணிவரை

**தரகர் தேவையில்லை**

(12965)

தொடர்புகளுக்கு - **ஜெயம்**
**077 814 7389, 077 241 7589**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.10.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.